## சுருக்கம்

பொதுப் பணிகள் – அரசு அலுவலர்களின் பதவி உயர்வுக்கான அவர்தம் முறை வரும் முன்னர் மற்றும் ஓய்வு பெறவுள்ள நிலையில் செயற்கையாக காலிப்பணியிடங்களை ஏற்படுத்தி பதவி உயர்வு வழங்குதல் – தவிர்த்தல் – அறிவுறுத்தல்கள் – வெளியிடப்படுகின்றன.

---

## மனிதவள மேலாண்மை (எஸ்) துறை

அரசாணை (நிலை) எண். 77

நாள்: 27.07.2022
சுபகிருது, ஆடி - 11,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்க :

1. அரசாணை (ப) எண்.177, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 20.09.2001.
2. அரசு கடிதம் எண். 58353/எஸ்/2007, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 22.05.2008.

******

ஆணை:

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளன்று அல்லது அதற்கு சில நாட்கள் முன்னதாக பதவி உயர்வு அளிப்பதற்கு ஏதுவாக பணியில் உள்ள மூத்தோர் விடுப்பில் செல்வதன் மூலம் ஏற்படும் செயற்கையான காலிப்பணியிடங்களில் பதவி உயர்வு அளிப்பதை கட்டாயமாக தவிர்த்திடுமாறு அனைத்து நியமன அலுவலர்களுக்கும் அறிவுறுத்தங்கள் வழங்கப்பட்டன. எனினும், அரசுப் பணியாளர்களின் இறப்பு, பணி ஓய்வு, நீண்டகால விடுப்பு ஆகியவற்றால் ஏற்படும் காலிப்பணியிடங்களை நடைமுறையில் விதிகளை பின்பற்றி நிரப்புவதற்கு தடையேதும் இல்லை எனவும் அவ்வாணையில் தெரிவிக்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில், அரசுப் பணியாளர்கள் உரிய காலத்தில் பதவி உயர்வு பெற ஏதுவாக தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலினை வெளியிடுவதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்த்திடுமாறு அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

3. எனினும், சில நேர்வுகளில் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தாமதமாக வெளியிடப்பட்டு, முழு தகுதி உடையோருக்கு உரிய காலத்தில் பதவி உயர்விற்கான வாய்ப்புகள் இல்லாத நிலை ஏற்படுகிறது என்றும், சில அலுவலர்களுக்கு ஓய்வு பெறும் நாளன்றோ அல்லது சில நாட்களுக்கு முன்னரோ பதவி உயர்வு வழங்க செயற்கையாக காலிப்பணியிடங்கள் ஏற்படுத்துதல் மற்றும் பதவி நிலை உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், மேலும், பதவி உயர்விற்கான அலுவலர்தம் முறை வரும் முன்னரே பதவி உயர்வு வழங்கிட

(த.பி.பா.)

ஏதுவாக, பதவி நிலையை உயர்த்தி உயர் பதவிகளில் முழு சேவை செய்யாமலேயே, பணப் பலன்களுக்காக பதவி உயர்வு வழங்கப்பட கருத்துருக்கள் ஏற்படுத்துவதும் அரசின் கவனத்திற்கு வரப்பெற்றது.

4. மேற்காணும் பொருண்மை தொடர்பாக, அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மேலே படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவுறுத்தங்களை வலியுறுத்தும் வகையில் அனைத்து நியமன அலுவலர்களுக்கும் பின்வருமாறு அறிவுறுத்தங்கள் வழங்கப்படுகின்றன:-

i. நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் அறிவுறுத்தங்களுக்கிணங்க, ஒவ்வோர் ஆண்டும் காலதாமதமின்றி உரியகாலத்தில் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டு, முறையான பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலமாக, தகுதியுள்ள அலுவலர்கள் பதவி உயர்வு பெறாமல் ஓய்வு பெறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

ii. சில அரசு அலுவலர்களுக்கு சாதகமான வகையில், அவர்கள் ஓய்வு பெறுவதற்கு சிலநாட்கள் முன்னதாகவோ, அவர்கள் ஓய்வு பெறும் நாளன்றோ அல்லது பதவி உயர்வுக்கான அவர்தம் முறை வரும் முன்னரோ பதவி உயர்வு வழங்கும் வகையில் செயற்கையாக காலிப்பணியிடங்களை ஏற்படுத்தி (விடுப்பில் சென்று காலிப்பணியிடத்தை உருவாக்குதல், பணியிடத்தை நிலை உயர்த்துதல், மற்றும் தற்காலிக பதவி உயர்வு வழங்குதல்) பதவி உயர்வு வழங்கும் செயல்கள் முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டும்.

5. மேற்காணும் அறிவுறுத்தங்களை அனைத்து நியமன அலுவலர்களும் தவறாமல் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு,
தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசு செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 600 009.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009.
அனைத்து துறைத்தலைவர்கள். (தலைமைச் செயலகத் துறை வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை / மதுரை கிளை.
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003.
நிதி (பொ.நி.மா.க)த் துறை, சென்னை - 600 009.

<u>நகல்</u>

முதலமைச்சரின் செயலாளர்-III, முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.

தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சென்னை - 600 009.
மனிதவள மேலாண்மைத் துறை செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை - 600 009.
மனிதவள மேலாண்மைத் துறையின் அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், சென்னை - 600 009.
மனிதவள மேலாண்மைத் (நி.சீ.2) துறை, சென்னை - 600 009.
(தமிழ்நாடு அரசு இணையதளத்தில் வெளியிடுதல் குறித்து)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
27/07/22